# பொதுப்பணித்துறை

# நீர்வள ஆதாரத்துறை

## மக்கள் சாசனம்

## 2019

# பொதுப்பணித்துறை
# நீர்வள ஆதாரத்துறை

## மக்கள் சாசனம்

### 1.0. நீர்வள ஆதாரத் துறையின் முக்கிய திட்டங்கள் / செயல்பாடுகள்

- குடிமராமத்து திட்டம்
- நீர்நிலைகளிலிருந்து எடுக்கப்படும் வண்டல் மண்ணை பொதுமக்கள், மட்பாண்டம் செய்பவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குதல்
- அத்திக்கடவு – அவினாசி திட்டம்
- கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களுக்கிடையே தலை மதகுகளுடன் கூடிய கதவணை அமைத்தல்
- தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு நதிகள் இணைப்பு திட்டம்
- அணைகள் மற்றும் நீர்நிலைகள் தூர்வாருதல்
- கிருஷ்ணா நதிநீர் வழங்கும் திட்டம்
- மாநில நிதி மற்றும் நபார்டு நிதி உதவியுடன் புதிய பாசனக்கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் ஏற்கெனவே உள்ள பாசன அமைப்புகளை புனரமைத்தல்
- வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்கள்
  1. உலக வங்கி நிதியுதவியுடன் அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (DRIP).
  2. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் காவேரி கழிமுகப்பகுதியில் பருவநிலை மாறுதல்களை தழுவல் திட்டம் (ADB)
  3. உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம் (TN IAMP).
  4. உலக வங்கி நிதியுதவியுடன் தேசிய நீரியல் திட்டம் (NHP).
- மத்திய அரசின் நிதியுதவி மற்றும் பங்களிப்பு திட்டங்கள்
  1. தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (NADP).
  2. வேளாண்மையுடன் நேரடி தொடர்புடைய நீர்நிலைகளை செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் திட்டம் (RRR)
- மாநிலத்திற்குள் நதிகளை இணைத்தல்

### 1. 1. தமிழ்நாட்டின் நீர்வள ஆதாரங்கள்

- மாநிலத்திலுள்ள 34 ஆறுகள், 17 பெரிய ஆற்று வடிநிலங்களாகவும், 127 உப வடிநிலங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தின் சராசரி மழையளவு 911.60 மி.மீ ஆகும். மாநிலத்தின் மொத்த மேற்பரப்பு நீர்வள ஆதாரம், அண்டை மாநிலங்களிலிருந்து, பன்மாநில ஒப்பந்தங்களின்படி பெறப்படும் 249 டி.எம்.சி. அடியினையும் உள்ளடக்கி, 885 டி.எம்.சி. அடியாகும்.

- வருவாய் குறுவட்ட அளவிலான நிலத்தடி நீர்வள நுண்ணிய ஆய்வின் அடிப்படையில், மாநிலத்திலுள்ள 1,139 குறுவட்டங்களில், 358 குறுவட்டங்கள் அதி நுகர்வு குறுவட்டங்களாகவும், 105 அபாயகரமானதாகவும், 212 மித அபாயகரமானதாகவும், 35 உவர் நீர் குறுவட்டங்களாகவும், 429 குறுவட்டங்கள் பாதுகாப்பானதாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நிலத்தடி நீர்வளத்தின் இருப்பு மற்றும் தரம், துறையினால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## 2.0. துறையின் அமைப்பு

- முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், கட்டடம் ஆகியோர் பொதுப்பணித் துறையின் இரு தொழில்நுட்பத் தலைவர்களாக செயல்படுகின்றனர்.

- தலைமைப் பொறியாளர் (பொது) துறையின் பணியமைப்பு மற்றும் நிர்வாகப் பணிகளை மேற்கொள்கிறார். தற்பொழுது, முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, தலைமைப் பொறியாளர் (பொது) பதவியையும் வகித்து வருகிறார்.

- நீர்வள ஆதாரத்துறை, ஆற்று வடிநில அடிப்படையில் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் தலைமை ஏற்கும் தலைமைப் பொறியாளர் அம்மண்டலத்தின் எல்லைக்குட்பட்ட ஆற்று வடிநிலங்களின் மேலாளராக செயல்படுகிறார்.

- மேலும், 7 தலைமைப் பொறியாளர்கள், சிறப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

### 2.1. தலைமைப் பொறியாளர்களின் செயல்பாடுகள்

### 2.1.1. மண்டலத் தலைமைப் பொறியாளர்கள்

- மண்டலத்திலுள்ள அனைத்து பாசன அமைப்புகளுக்கும் ஒட்டுமொத்த பொறுப்பாளர்கள் ஆவர் ;

- வடிநிலங்களுக்கான நோக்கம் மற்றும் குறிக்கோள்களை அடைதல், பணிகளின் முன்னுரிமையைக் கண்டறிதல், போதிய தரக்கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடித்தல் ;

- பாசன கட்டமைப்பு மற்றும் அதன் தொடர்பான அமைப்புகளை முன்னுரிமை அடிப்படையில் பராமரித்தல் ;
- அனைத்துப் பணிகளிலும் போதுமான தரக்கட்டுப்பாட்டு முறையினை செயல்படுத்துதல் ;
- சிறந்த சுற்றுச்சூழல், பாசனத் திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல், பொருளாதார மறுவாழ்வுத் திட்டம் ஆகியவற்றை உறுதி செய்தல் ;
- புதிய திட்டங்கள் தொடர்பாக விவசாயிகளுடனும், விவசாயிகள் அமைப்புகளுடனும் ஒருங்கிணைந்து செயல்படுதல் ;
- பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்கான நீரொழுங்குமுறை மற்றும் வெள்ளத் தடுப்புப்பணிகள்
- கடலோர பாதுகாப்பு நடவடிக்கைகள்.

### 2.1.2. தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம்

- நில அளவை மற்றும் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு புதிய திட்டங்களை உருவாக்கும் பணிகளை மேற்கொள்ளுதல் ;
- திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகளை தயாரித்தல்.
- அத்திக்கடவு – அவினாசி திட்டம், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களுக்கிடையே தலை மதகுகளுடன் கூடிய கதவணை அமைத்தல் போன்ற சிறப்புத் திட்டங்களை செயலாக்குதல்.

### 2.1.3. தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்

- திருவள்ளூர் மாவட்டம், பூண்டியில் அமைந்துள்ள நீரியல் மற்றும் நீர் நிலையியல் ஆய்வு நிறுவனம் இவ்வமைப்பின் கீழ் இயங்கி வருகிறது
- இந்நிறுவனத்தில், நீரியல், நீர்நிலையியல் மற்றும் கடலோர கட்டுமானங்களின் மாதிரி வடிவமைப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன
- மேலும், இந்நிறுவனம் மாநிலத்தின் கடற்கரையோரங்களில் ஏற்படும் மாற்றங்களை கண்காணித்தல் மற்றும் கடலோரப் பாதுகாப்புப் பணிகளை ஆய்வு செய்தல் ஆகிய பணிகளையும் மேற்கொள்கிறது
- தள விவரங்களின் அடிப்படையில் திட்டப் பணிகளுக்குத் தேவையான அனைத்து கூறுகளுக்கும் வடிவமைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்

- இப்பிரிவின் கீழ் செயல்படும் மண் தன்மை ஆராய்ச்சிக் கோட்டம், மண்ணின் தன்மை, கற்காரை மற்றும் கட்டுமானப் பொருட்களின் தரம் குறித்த சோதனைகளை மேற்கொள்ளும் மையத் தரக்கட்டுப்பாட்டுச் சோதனைக் கூடமாக சென்னையில் செயல்பட்டு வருகிறது.

- பொள்ளாச்சியில் அமைந்துள்ள நீர்வடிப்பகுதி மேலாண்மை வாரியக் கோட்டம், தமிழ்நாட்டில் தெரிவு செய்யப்பட்ட நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிவு மற்றும் நீர்வடிப்பகுதி மேலாண்மை பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு, நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிவால் குறைந்துள்ள கொள்ளளவினை கண்டறிந்து வருகின்றது.

### 2.1.4. தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு

- அணைப் பாதுகாப்பு இயக்ககம், மாநிலத்தின் அனைத்து அணைகளின் (நீர்வள ஆதாரத்துறை மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக அணைகள்) உறுதித் தன்மை குறித்த அறிக்கைகளை தயாரித்து ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையை மத்திய நீர் குழுமத்திற்கு அளிக்கின்றது

- பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை, புதிய வாகனங்களை கொள்முதல் செய்தல், பயன்படுத்தவியலாத வாகனங்கள், பயனற்ற இயந்திரங்கள் மற்றும் கருவி தளவாடங்கள் கழிவு நீக்கம் செய்யும் பணிகளை மேற்கொள்கிறது. மேலும் நீர்த்தேக்கங்களின் கதவுகளில் அவ்வப்போது ஏற்படும் அவசர கால சிறு பழுதுப் பணிகளை மேற்கொள்கிறது

- இவ்வமைப்பு மாநிலத்திலுள்ள அணைகளின் நீரோட்டத் தரவுகளை சேகரித்து தினசரி நீர் அறிக்கையினை அளித்து வருகிறது

- இதற்காக நீர் விவரக் குறிப்பு மையம் ஆண்டு முழுவதும் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. இம்மையமானது ஒவ்வொரு ஆண்டும், வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் தேவைப்படும் கூடுதல் அலுவலர்களின் மாற்றுப்பணி சேவையுடன் வெள்ளம் குறித்த தகவல்களையும் சேகரிக்கிறது.

### 2.1.5. தலைமைப் பொறியாளர், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்

- இம்மையம், மாநிலத்தின் நிலநீர் இருப்பையும், தரத்தையும் கால வரையறைகளில் அளவிட்டு வருகிறது ;

- மேலும், மாநிலத்தில் முழு அளவிலான வானிலை குறித்த தகவல் நிலையங்களைப் பராமரித்தல், நீர்த்தாங்கிகளின் வரைபடம் மற்றும் நீர்த்தாங்கிகளை மேலாண்மை செய்தல் மற்றும் நிலத்தடி நீர் கண்காணிப்பு இணைவமைவை பலப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

### 2.1.6. தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர், நீர் ஆய்வு, நீரியியல் மற்றும் தரக்கட்டுப்பாடு நிறுவனம்

- தமிழ்நாட்டின் அனைத்து ஆற்றுப் படுகைகளில் உள்ள நீர்வள ஆதாரங்களை நுண்ணிய அளவில் திட்டமிடுதல், மதிப்பிடுதல் மற்றும் நிர்வகித்தல்
- வடிநில ஆற்றுப்படுகைகளுக்கான நுண்ணிய அளவிலான மறு ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளுதல்
- மேம்படுத்தப்பட்ட தொலையுணர்வு மையத்தின் மூலம் மாநிலத்தின் வடிநில மற்றும் உபவடிநில ஆற்றுப்படுகை வரைபடங்களை தயாரித்தல்.
- நீர்வள ஆதாரத்துறையின் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய 4 தரக்கட்டுப்பாட்டு கோட்டங்கள் மற்றும் கட்டடத்துறையின் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய 3 தரக்கட்டுப்பாட்டு கோட்டங்கள் 11.06.2018 முதல் நீர் ஆய்வு நிறுவனத்தின் கீழ் இயங்கும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டு, செயல்பட தொடங்கியுள்ளன.

### 2.1.7. தலைமைப் பொறியாளர் மற்றும் பொது இயக்குநர், பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்

- இந்நிலையத்தினால் அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கு பாசன மேலாண்மை, நிலத்தடி நீரை மேம்படுத்துதல் மற்றும் மேலாண்மை மற்றும் கணினி தொடர்பான பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன
- மேலும், பேரிடர் மேலாண்மை, கடற்கரை நீரியல் மற்றும் கடல் நீர் ஊடுருவலைத் தடுத்தல், அணைப் பாதுகாப்பு மற்றும் அணை பாதுகாப்பு கருவிகள் அமைத்தல் போன்ற தனிச்சிறப்பு வாய்ந்த பயிற்சிகள் பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தால் அளிக்கப்படுகிறது ;
- இந்நிலையம், அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு பயிற்சி வகுப்புகள் மற்றும் பயிற்சி சுற்றுப்பயணங்களை ஏற்பாடு செய்கிறது
- விவசாய அமைப்பின் பொறுப்பாளர்கள் பயனடையும் வகையில் துவக்கநிலை பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

### 2.1.8. தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர், மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை (SWaRMA)

- இம்முகமை நீர் பங்கீடு, வடிநில நீர்மேம்பாடு மற்றும் திறன்மிகு நீர் மேலாண்மை அணுகுமுறையை செயல்படுத்துவது குறித்து அரசுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

## 2.2. இயக்குநர், கொதிகலன்கள் இயக்ககம்

- கொதிகலன்கள் சட்டம், 1923–ன்படி கொதிகலன்கள் பாதுகாப்பாக இயங்கவும், கொதிகலன்களால் பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் பாதுகாக்கும் அதிகாரம் படைத்த அமைப்பாகவும் கொதிகலன்கள் இயக்ககம் செயல்படுகிறது ;

- மாநிலத்தில் கொதிகலன்கள் மற்றும் அதனைச் சார்ந்த நிறுவனங்களின் வளர்ச்சியில் கொதிகலன்கள் இயக்ககம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

## 2.3. தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள்

- தலைமைப் பொறியாளர் அலுவலகங்களில் தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்களின் விவரங்கள் **இணைப்பு I**–இல் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், பாசனம் தொடர்பான விவரங்களை துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலகங்களை அணுகிப் பெறலாம்.

## 3.0. நீர்வள ஆதாரத்துறையின் சேவைகள்

## 3.1. அணைகள், நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள், தடுப்பணைகள், கால்வாய்கள், ஏரிகள், குளங்கள் போன்றவற்றை கட்டுதல், புனரமைத்தல் மற்றும் பராமரித்தல்

- புதிய பாசன உள்கட்டமைப்புகளை உருவாக்குவது என்பது திட்டங்களை செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளும் முன்பாக, சாத்தியக் கூறு ஆய்வு, மண் பரிசோதனைகள், விரிவான ஆய்வு, விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், செலவினத்திற்கான நிதி குறித்து மாநில / மத்திய அரசிடம் ஒப்புதல் பெறுதல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்

- திட்டங்களை செயல்படுத்துவதற்கு, தேவையான நிலங்களை கையகப்படுத்தும் பணிக்கு போதிய கால அவகாசம் தேவைப்படும்

- ஒப்பந்த கால அளவானது 6 மாதம் முதல் 24 மாதம் வரை திட்டத்தின் மதிப்பு மற்றும் பணியை தொடங்கும் காலத்தைப் பொறுத்து மாறுபடும்

- வெளிநாட்டு நிதி உதவி நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பெரிய திட்டங்கள் 6 முதல் 8 வருட காலத்தில் படிப்படியாக செயலாக்கப்படும்

- அனைத்து பாசன உள்கட்டமைப்புகளில் புனரமைப்புப் பணிகள் பாசனமில்லாத காலங்களில் மட்டும் விரைந்து செயல்படுத்த இயலும்

- ஏரிகள், வாய்க்கால்கள் மற்றும் உபரிநீர் செல்வழிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் மற்றும் பிற துறைகளால் நடப்படும் மரங்களை அகற்றுதல், சுற்றுச்சூழல் அனுமதி, கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் அனுமதி பெறுதல் போன்றவையும் திட்டத்தின் கால அளவை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளாகும்

- பாசன அமைப்பின் கடைமடைப் பகுதி வரை பாசனத் தேவைகளைப் பூர்த்தி செய்தலை உறுதி செய்யும் பொருட்டு காலமுறைப்படி பராமரிப்பு பணிகள் உரிய தரத்தில் குறித்த காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 3.2. குடிமராமத்து முறைக்கு புத்துயிரூட்டுதல் – பங்கேற்பு அணுகுமுறையுடன் நீர்நிலைகளை மீட்டெடுத்தல்

- நீர்நிலைகளை பயனீட்டாளர்களின் ஒத்துழைப்போடு மீட்டெடுக்க குடிமராமத்துத் திட்டத்தினை உயிரூட்ட அரசு தீர்மானித்தது. ஏரிகள், கால்வாய்கள் மற்றும் வரத்துவாய்க்கால்களைப் பராமரித்தல், மதகுகள், மிகை நீர் கலிங்குகளை மறுகட்டுமானம் செய்தல், ஏரிக்கரைகளைப் பலப்படுத்துதல் ஆகியவை குடிமராமத்து பணிகளில் அடங்கும்;

- குடிமராமத்து பணிகள் நியமன அடிப்படையில், விவசாய சங்கங்கள் அல்லது பாசன சபைகள் அல்லது ஆயக்கட்டுதாரர் மற்றும் ஆயக்கட்டுதாரர்களின் தொகுப்பின் மூலம் செயல்படுத்தப்படும். மதிப்பீட்டுத் தொகையில் 10 சதவிகிதம் விவசாய சங்கங்கள் / பாசன சபைகள் / ஆயக்கட்டுதாரர்கள் ஆகியோரின் உழைப்பு அல்லது பொருள் அல்லது பணப் பங்களிப்பாகப் பெறப்படுகிறது.
- குடிமராமத்துப் பணிகளைத் துவக்குவதற்கு தேவைப்படும் நிதி திரட்டுவதில் உள்ள சிரமங்களை எதிர்கொள்ளவும், சில குறிப்பிடத்தக்க தொடக்க நிலைப் பணிகளை மேற்கொள்ளவும், தெரிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்கள் / பாசன சபைகள் / ஆயக்கட்டுதாரர்கள் அல்லது ஆயக்கட்டுதாரர்களின் தொகுப்பிடம் ஒப்பந்த மதிப்பில் 15 சதவிகிதம் முன்பணமாக வழங்கி அதனை முதல் மூன்று பட்டியல்களில் திரும்பப் பெறவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## 3.3. சென்னை, மண்தன்மை மற்றும் ஆராய்ச்சிக் கோட்டம் வழங்கும் தொழில்நுட்ப கலந்தறி சேவைகள்

- சென்னை, தரமணியில் செயல்படும் மண்தன்மை மற்றும் ஆராய்ச்சிப் பரிசோதனைக் கூடங்கள் வாயிலாக, மண்தன்மை ஆய்வு, கற்காரை பரிசோதனைகள் மற்றும் கட்டுமானப் பொருட்களின் வேதியியல் தன்மைகளை பகுப்பாய்வு செய்தல் ஆகியவற்றிற்கு கட்டண அடிப்படையில் தொழில்நுட்ப கலந்தறி சேவை அளிக்கப்பட்டு வருகின்றன.
- இச்சேவைகள் தொடர்பான கட்டண விவரம் மற்றும் ஆய்விற்கான கால அளவு போன்ற விவரங்கள் **இணைப்பு II**–இல் அளிக்கப்பட்டுள்ளன.

## 3.4. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் வழங்கும் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள்

- சென்னை தரமணியில் அமைந்துள்ள மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் மற்றும் அதன் கோட்டம், விவசாய பெருமக்கள் மற்றும் பொதுமக்களுக்கு கட்டண அடிப்படையில் பின்வரும் கலந்தறி ஆலோசனை சேவைகளை அளித்து வருகிறது:–

அ. ஆழ்துளைக்கிணறு / திறந்தவெளிக்கிணறு அமைக்க தகுந்த இடம் தெரிவு செய்வதற்கான புவியமைப்பு ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

ஆ. மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரின் தரம் தொடர்பான ஆய்வுகள்.

இ. தகவல்களை பகிர்தல்.

- இவ்வாய்வுகளுக்காக பெறப்படும் கட்டணங்கள் மற்றும் ஆய்வு செய்வதற்கான கால அளவுகள் போன்ற விவரங்கள் **இணைப்பு –III**-இல் அளிக்கப்பட்டுள்ளன.

### 3.5. பங்கேற்பு பாசன மேலாண்மைத் திட்டம்

- தமிழ்நாடு விவசாயிகள் அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம், 2000 (தமிழ்நாடு சட்டம் 7/2001) இயற்றப்பட்டு 01.10.2002 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது
- இந்த சட்டத்தின் அடிப்படையில் பின்வரும் விவசாய அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது:

அ. முதல் நிலை – நீரினைப் பயன்படுத்துவோர்களைக் கொண்ட “நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம்.”

ஆ. இரண்டாம் நிலை – “பகிர்மானக் குழு.”

இ. திட்ட அளவில் “திட்டக் குழு.”

- இந்த அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்படும் அலுவலக பொறுப்பாளர்கள் 5 ஆண்டுகள் மற்றும் 6 மாதங்கள் பொறுப்பில் இருப்பர்
- இச்சட்டத்தின்படி அரசினால் விவசாயிகள் அமைப்பிற்கு தகுதிவாய்ந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்
- மீன்பாசி குத்தகை வருமானத்தை விவசாயிகள் அமைப்புகளுடன் பகிர்ந்துகொள்ள அரசு ஆணையிட்டுள்ளது.

### 3.6. நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

#### 3.6.1. தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம், 2007

- நீர்வள ஆதாரத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளில் ஆக்கிரமிப்புகளைத் தடுக்கவும் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் அரசு “தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம், 2007” (தமிழ்நாடு சட்டம் எண்.8/2007) எனும் சட்டத்தை இயற்றி உள்ளது.

இச்சட்டத்தை அமல்படுத்தும் அலுவலர்கள் பின்வருமாறு :

| | |
|---|---|
| நில அளவை அலுவலர் | நில அளவை மற்றும் நிலப் பதிவேடுகள் துறையில் நில அளவை அலுவலர் பணி நிலைக்குக் குறையாத பதவியில் உள்ள குறுவட்ட நில அளவையர் அல்லது நகர நில அளவையர் |
| நீர்வள ஆதாரத்துறையின் அலுவலர் | தனது கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளுக்குப் பொறுப்பான உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் / மேற்பார்வையாளர், நீர்வள ஆதாரத்துறை |
| குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஆக்கிரமிப்பாளர்களுக்கு வழங்கப்படும் தண்டனை | 3 மாதம் வரை நீட்டிக்கப்படக் கூடிய சிறை தண்டனை அல்லது ரூபாய் 5000 அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து |

### 3.6.2. தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905

- தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905 அரசின் சொத்துக்களை அத்து மீறி ஆக்கிரமிப்பு செய்வதைத் தடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905 இயற்றப்பட்டுள்ளது.
- அரசாணை எண்.2898, வருவாய்த்துறை, நாள் 03.12.1969–ன்படி பொதுப்பணித்துறையின் புறம்போக்கு நிலங்கள், வாய்க்கால்கள் மற்றும் ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான அதிகாரம் பொதுப்பணித் துறையின் உதவிப் பொறியாளர்களுக்கு (தற்போது உதவி செயற்பொறியாளர்கள்) மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது
- இச்சட்டத்தின்படி நீர்வள ஆதாரத்துறையின் நீர்நிலைகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றவும், செயல்முறை மற்றும் வழிமுறைகளை உருவாக்கவும் உதவிப் பொறியாளர் முதல் செயற்பொறியாளர் நிலை வரை பொறுப்புகளை நிர்ணயித்து (அரசாணை நிலை எண்.540, வருவாய் [LD6(2)] துறை, நாள் 04.12.2014 மற்றும் அரசாணை நிலை எண்.148, வருவாய் [LD6(2)] துறை, நாள் 24.03.2016) ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

### 3.7. குறைகள் தீர்த்தல்

- பொதுமக்களிடமிருந்து உரிய ஒப்புகையுடன் கோரிக்கை மனுக்கள் பெறப்படுகின்றன. அவ்வாறு பெறப்படும் மனுக்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் உரிய நபர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.
- முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு வரும் மனுக்களை பெற்று அதை உரிய கள அதிகாரிகளுக்கு அனுப்பி அவற்றின்மீது தள ஆய்வு மற்றும் விசாரணை செய்யப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## 4.0. தமிழ் நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998

- **1998** ஆம் ஆண்டைய தமிழ் நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், **11.12.1998** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சட்டம், பொதுப் பணிகளில் ஒளிவுமறைவற்ற தன்மையை ஏற்படுத்துதல், ஒப்பந்தப் புள்ளிகளை கோருதல் மற்றும் ஏற்பது ஆகிய பணிகள் தொடர்பான நடைமுறைகளை வரையறுக்கிறது.

## 4.1. மின்னணு ஒப்பந்த முறை

- ரூ.10.00 இலட்சத்திற்கு மிகையான பணிகளுக்கான திறந்த நிலை ஒப்பந்த ஆவணங்களை மின்னணு மூலம் இலவசமாக வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## 4.2. ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

- நீர்வள ஆதாரத்துறையில் ஒப்பந்த முறையில் பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தக்காரர்களை உரிய வகுப்பில் கண்காணிப்புப் பொறியாளர் / செயற் பொறியாளர் ஆகியோர் பதிவு செய்து வருகின்றனர்.

## 4.3. ஒப்பந்தப் புள்ளிகள் அறிவிப்பு வெளியிடுதல்

- ரூ.2 கோடி மற்றும் அதற்கு குறைவான பணிகளின் மதிப்பு : 15 நாட்கள்
- ரூ.2 கோடிக்கு மேலான பணிகளின் மதிப்பு : 30 நாட்கள்
- சில சிறப்பு நிகழ்வுகளில், பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப் புள்ளிகளை, அடுத்த உயர் அதிகாரியின் முன்அனுமதியுடன் தகுதிவாய்ந்த அலுவலர் கோரலாம்.

## 4.4. ஒப்பந்தப் புள்ளிகளை பரிசீலனை செய்வதற்கான கால அளவு

- ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளிலிருந்து ஒரு மாத காலம்.

## 5.0. அரசின் நீர் ஆதாரங்களிலிருந்து நீர் வழங்குதல்

## 5.1. பாசனப் பயன்பாடு

- பாசனத்திற்காக நீரினைப் பயன்படுத்துவோரிடமிருந்து தனிப்பட்ட தண்ணீர்த் தீர்வை ஏதும் வசூலிக்கப்படுவதில்லை

- நன்செய் நிலங்களுக்கு எக்டேருக்கு ரூ.12 மற்றும் புன்செய் நிலங்களுக்கு எக்டேருக்கு ரூ.5 மட்டும் நிலத் தீர்வையாக வருவாய்த் துறை வசூல் செய்கிறது. (அரசாணை (நிலை) எண்.544, வருவாய் [RA1(1)] துறை, நாள் 20.10.2010).

- முறையற்ற பாசனத்திற்கு எக்டேருக்கு ரூ.500/—ஐ வருவாய்த் துறை தண்டத்தீர்வையாக வசூலிக்கிறது. (அரசாணை நிலை எண்.545, வருவாய் [RA1(1)] துறை, நாள் 20.10.2010).

**5.2. குடிநீர் பயன்பாடு / தொழிற்சாலை பயன்பாடு**

- அரசு நீர் ஆதாரங்களிலிருந்து நாளொன்றுக்கு 1 மில்லியன் காலன் அளவுக்குக் குறைவாக தண்ணீர் எடுப்பதற்கு வருவாய்த்துறையின் பரிந்துரையின்பேரில் தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்தின் ஒத்திசைவுடன் அரசால் அனுமதி வழங்கப்படுகிறது ;

- அரசு நீர் ஆதாரங்களிலிருந்து நாளொன்றுக்கு 1 மில்லியன் காலன் மற்றும் அதற்கு மேல் நீர் எடுப்பதற்கு தொழில்நுட்ப துணைக்குழுவின் பரிந்துரை மீது நீர்ப் பயன்பாட்டுக் குழுவின் ஒப்புதலுக்குப் பின் நீர் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

**6.0. மணல் குவாரி**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28.6.2017 அன்று, தமிழகத்தில் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணல் உபயோகிப்பாளர்களுக்கு தடையின்றி கிடைத்திட ஏதுவாக "தமிழ்நாடு மணல் இணைய சேவை" www.tnsand.in இணையதளத்தையும், "tnsand" செல்லிடப்பேசி செயலியையும் (App.) துவக்கி வைத்தார்கள்.

- போலி பதிவெண் கொண்ட வாகனங்களை ரத்து செய்யவும், பின்னாளில் ஏதேனும் முறைகேடுகள் ஏற்படாமல் இருப்பதற்கும் மாநிலம் முழுவதும் அவ்வப்போது வாகன சரிபார்ப்பு முகாம்கள் நடைபெற்று வருகின்றன. தற்போது செயல்படும் மணல் குவாரிகள் சிலவற்றில் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுள்ளன. மேலும், புதிதாக துவங்கப்படவுள்ள அனைத்து மணல் குவாரிகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) கட்டாயமாக பொருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாட்டில் கட்டுமான பணிகளுக்காக பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மணல் அல்லது பிற மாநிலங்கள்/ஒன்றிய பகுதிகளிலிருந்து கொண்டுவரப்படும் மணல் தமிழ்நாடு பொதுப்பணித்துறையின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

**7.0. ஏரிகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் பிற நீர்நிலைகளிலிருந்து களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளை மண்ணை பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் மட்பாண்டம் செய்பவர்களுக்கு வழங்குதல்**

- ஏரியின் படுகைகள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்களிலிருந்து களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளை மண்ணை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ள நீர்நிலைகளிலிருந்து சம்மந்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்தின் முன்அனுமதி பெற்று இலவசமாக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

- வேளாண் பயன்பாட்டிற்காக 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை வண்டல் மண் மற்றும் களிமண் அகற்றும் அளவு, நன்செய் நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 75 கன மீட்டருக்கு மிகாமலும் (ஹெக்டேருக்கு 185 கன மீட்டருக்கு மிகாமலும்) மற்றும் புன்செய் நிலங்களில் ஒரு ஏக்கருக்கு 90 கன மீட்டருக்கு மிகாமலும் (ஹெக்டேருக்கு 222 கன மீட்டருக்கு மிகாமலும்) இருக்க வேண்டும். வீடு சார்ந்த (domestic) பயன்பாட்டிற்கு மண், சவுடு மற்றும் சரளை மண் எடுக்கும் அளவு 30 கன மீட்டருக்கு மிகாமலும், மட்பாண்டங்கள் செய்வதற்கு எடுக்கப்படும் களிமண் 60 கன மீட்டருக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

**8.0. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005**

- தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன்படி தகவல் அளிப்பதற்காக அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள் அலுவலகங்களிலும், பொது தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் உள்ளனர். அவர்களின் முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் தகவல்கள் இணைப்பு – IV–இல் அளிக்கப்பட்டுள்ளன.

**எடப்பாடி கே. பழனிசாமி**

**முதலமைச்சர்**

## இணைப்பு – I

## தலைமைப் பொறியாளர் அலுவலகங்களில்

## தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள் பட்டியல்

| வ. எண் | அலுவலகத்தின் பெயர் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 1. | முதன்மைத் தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை (ம)<br>தலைமைப் பொறியாளர் (பொது),<br>பொதுப்பணித்துறை,<br>சேப்பாக்கம், சென்னை– 600 005.<br>தொலைபேசி எண் :<br>044 – 2852 5351<br>நிகரி எண்: 044 – 28594148<br>மின்னஞ்சல் :<br>eicwrdtn@gmail.com | 1. இணைத் தலைமைப் பொறியாளர் (பொது)<br>தொலைபேசி எண் : 044–28594145<br>2. இணைத் தலைமைப் பொறியாளர் (பாசனம்)<br>தொலைபேசி எண் : 044–28594144<br>3. கண்காணிப்புப் பொறியாளர் (கொள்முதல்), நீர்வள நிலவளத் திட்டம்.<br>4. கண்காணிப்புப் பொறியாளர் (சுரங்கம் மற்றும் கண்காணிப்பு)<br>044 – 28414487 |
| 2. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>சென்னை மண்டலம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை–600 005.<br>தொலைபேசி எண் :<br>044 – 2852 3007<br>நிகரி எண் :044-28523007<br>மின்னஞ்சல் :<br>cecrwropwd@gmail.com | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>சென்னை மண்டலம்.<br>தொலைபேசி எண் :044–28523007 |
| 3. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>திருச்சி மண்டலம்,<br>புதுக்கோட்டை சாலை,<br>த.பெ.எண்.803, சுப்பிரமணியபுரம்,<br>திருச்சிராப்பள்ளி – 620 020.<br>தொலைபேசி எண் :<br>0431 – 2332287<br>நிகரி எண் :0431 - 2331148<br>மின்னஞ்சல் : cetrydb@gmail.com | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>திருச்சி மண்டலம்.<br>தொலைபேசி எண் :0431–2332287 |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 4. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>கோயம்புத்தூர் மண்டலம்,<br>கோயம்புத்தூர்–641 001.<br>தொலைபேசி எண்:<br>0422 – 2381804<br>நிகரி எண்:0422 - 2381801<br>மின்னஞ்சல்:<br>chiefwropwd@gmail.com | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>கோயம்புத்தூர் மண்டலம்.<br>தொலைபேசி எண்:0422–2381803 |
| 5. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>மதுரை மண்டலம்,<br>தல்லாகுளம், மதுரை–625 002.<br>தொலைபேசி எண்:<br>0452 – 2530326<br>நிகரி எண்:0452 - 2530826<br>மின்னஞ்சல்:<br>cewrodbmdu@gmail.com | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>மதுரை மண்டலம்<br>தொலைபேசி எண்:0452–2530326 |
| 6. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>திட்ட உருவாக்கம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை–600 005.<br>தொலைபேசி எண்:<br>044 – 2852 5662<br>நிகரி எண்:044 - 28525662<br>மின்னஞ்சல்:<br>cepf2007@yahoo.co.in | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>திட்ட உருவாக்கம்<br>தொலைபேசி எண்:044–28525662 |
| 7. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை–600 005.<br>தொலைபேசி எண்:<br>044 – 2841 3381<br>மின்னஞ்சல்: cedrcs@gmail.com | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்<br>தொலைபேசி எண்:044–28413381 |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 8. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>இயக்கம் மற்றும் பராமரிப்பு,<br>சேப்பாக்கம்,<br>சென்னை–600 005.<br>தொலைபேசி எண்:<br>044 – 2851 7261<br>நிகரி எண்:044 – 28517261<br>மின்னஞ்சல்:<br>ceomwro@gmail.com | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>இயக்கம் மற்றும் பராமரிப்பு<br>தொலைபேசி எண்:044–28415552 |
| 9. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்,<br>தரமணி,<br>சென்னை–600 113.<br>தொலைபேசி எண்:<br>044 - 22541526<br>நிகரி எண்:044 – 22541368<br>மின்னஞ்சல்:<br>cegwchennai@gmail.com | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்<br>தொலைபேசி எண்:044–22541369 |
| 10. | தலைமைப் பொறியாளர் (ம)<br>இயக்குநர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>நீர் ஆய்வு, நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாடு நிறுவனம்,<br>தரமணி, சென்னை–600 113.<br>தொலைபேசி எண்:<br>044 – 2254 2380<br>நிகரி எண்:044 – 22542360<br>மின்னஞ்சல்:<br>ceiwswrd@gmail.com | இணை இயக்குநர்,<br>நீர் ஆய்வு, நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாடு நிறுவனம்,<br>தொலைபேசி எண்:044–22542674 |
| 11. | தலைமைப் பொறியாளர் (ம)<br>தலைமை இயக்குநர்,<br>நீர்வள ஆதாரத் துறை,<br>பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், துவாக்குடி, | இணை இயக்குநர்,<br>பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்<br>தொலைபேசி எண்:0431–2500603 |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| | திருச்சிராப்பள்ளி – 620 015.<br>தொலைபேசி எண்:<br>0431 – 2500500<br>நிகரி எண்:0431 - 2501110<br>மின்னஞ்சல்:<br>tnimtitrichy@gmail.com | |
| 12. | தலைமைப் பொறியாளர் (ம)<br>இயக்குநர்,<br>மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை (SWaRMA),<br>தரமணி, சென்னை – 600 113.<br>தொலைபேசி எண்:<br>044 – 2254 0135<br>மின்னஞ்சல்:<br>swarmatn@gmail.com | செயற் பொறியாளர்,<br>மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை (SWaRMA)<br>தொலைபேசி எண்:044–22540135 |
| 13. | இயக்குநர்,<br>கொதிகலன்கள் இயக்ககம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை – 600 005.<br>தொலைபேசி எண்:<br>044 – 2852 2233<br>மின்னஞ்சல்:<br>tnboilerdir@tn.gov.in | துணை இயக்குநர்<br>கொதிகலன்கள் இயக்ககம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை – 600 005.<br>தொலைபேசி எண்:044–28522233 |

**இணைப்பு – II**

**மண் தன்மை மற்றும் ஆராய்ச்சி கோட்டம், சென்னை**

**மேற்கொள்ளும் பரிசோதனைகளின் விவரங்கள்**

| வ. எண் | பரிசோதனையின் விவரம் | பரிசோதனை கட்டணம் (ரூபாய்) | அலகு | காலஅளவு |
|---|---|---|---|---|
| **மண் பரிசோதனைகள்** | | | | |
| **I** | **களப் பரிசோதனைகள்** | | | |
| 1. | தரைமட்டத்திலிருந்து 10 மீ ஆழம் வரை துளையிட்டு செந்தர ஊடுருவு சோதனை செய்தல் | 10,000 | ஒரு துளைக்கு | 15 நாட்கள் |
| 2. | தரைமட்டத்திலிருந்து 10 மீ ஆழம் வரை துளையிட்டு செந்தர நிலை கூம்பு / இயங்கு கூம்பு ஊடுருவு சோதனை செய்தல் | 10,000 | ஒரு புள்ளிக்கு | 15 நாட்கள் |
| 3. | நில அடுக்கு படிவத்தின் ஊடுருவு தன்மை பரிசோதித்தல் | 2,000 | ஒரு புள்ளிக்கு | 7 நாட்கள் |
| **II** | **ஆய்வுக் கூடப் பரிசோதனைகள்** | | | |
| 4. | மண் குறியீடு மற்றும் நெகிழ்வுத் தன்மைகள் குறித்த பரிசோதனை | 2,000 | ஒரு மண் மாதிரிக்கு | 10 நாட்கள் |
| 5. | நேர் வெட்டு பரிசோதனை | 500 | ஒரு மண் மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 6. | பக்கவாட்டில் தடுக்கப்படாத அழுத்த வலிமை சோதனை | 500 | ஒரு மண் மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 7. | மண்மாதிரியின் நீர் ஊடுருவும் தன்மையை சோதித்தல் | 500 | ஒரு மண் மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 8. | மண் மாதிரியின் திடமாகும் திறன் கண்டறிதல் | 5,000 | ஒரு மண் மாதிரிக்கு | 15 நாட்கள் |
| 9. | மண் மாதிரியின் ப்ராக்டர் கெட்டிப்படுத்தும் திறன் கண்டறிதல் | 1,000 | ஒரு மண் மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 10. | மண் மாதிரியின் மாறுபட்ட வீக்க அழுத்தம் கண்டறியும் சோதனை | 500 | ஒரு மண் மாதிரிக்கு | 3 நாட்கள் |
| 11. | மண் மாதிரியின் வீக்க அழுத்தம் கண்டறியும் சோதனை | 5,000 | ஒரு மண் மாதிரிக்கு | 15 நாட்கள் |

| வ. எண் | பரிசோதனையின் விவரம் | பரிசோதனை கட்டணம் (ரூபாய்) | அலகு | காலஅளவு |
|---|---|---|---|---|
| **வேதியியல் பகுப்பாய்வு பரிசோதனைகள்** | | | | |
| 1. | சிமெண்ட் வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **5,000** | ஒரு மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 2. | சுண்ணாம்பு வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **5,000** | ஒரு மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 3. | நீர் வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **5,000** | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |
| 4. | சுட்ட செங்கற்தூள் / எரிசாம்பல் வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **5,000** | ஒரு மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 5. | மணல் வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **5,000** | ஒரு மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 6. | மண் வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **6,000** | ஒரு மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 7. | கலவை வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **3,000** | ஒரு மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 8. | பாறை மாதிரி வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **10,000** | ஒரு மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 9. | நீரின் கட்டுமான பயன்பாடு குறித்த வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **2,000** | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |
| 10. | குடிநீர் உபயோகம் , வீட்டு உபயோகம் மற்றும் தொழிற்சாலை உபயோகம் குறித்த நீர் வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **3,000** | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |
| 11. | மண்ணின் கரைத்து சிதைக்கவல்ல தன்மை குறித்த வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **2,500** | ஒரு மாதிரிக்கு | 7 நாட்கள் |
| **கற்காரை பரிசோதனைகள்** | | | | |
| **I** | **கள பரிசோதனைகள்** | | | |
| 1. | எதிர்வீச்சு சுத்தி சோதனை | **50** | ஒரு புள்ளிக்கு | 7 நாட்கள் |
| 2. | கேளா ஒலி துடிப்பு வேக கருவி சோதனை | **75** | ஒரு புள்ளிக்கு | 7 நாட்கள் |

| வ. எண் | பரிசோதனையின் விவரம் | பரிசோதனை கட்டணம் (ரூபாய்) | அலகு | காலஅளவு |
|---|---|---|---|---|
| 3. | வலு கம்பி விவர வருடி சோதனை | 75 | ஒரு புள்ளிக்கு | 7 நாட்கள் |
| 4. | கற்காரை பாகத்தை வெட்டி இறுக்க வலிமை சோதனை | 900 | ஒரு மாதிரிக்கு | 15 நாட்கள் |
| **II** | **ஆய்வுக் கூடப் பரிசோதனைகள்** | | | |
| 1. | கற்காரை இறுக்க வலிமை சோதனை | 150 | ஒரு சோதனைக்கு | 2 நாட்கள் |
| 2. | எஃகு கம்பிகளுக்கான பரிசோதனைகள் விறைப்பு வலிமை, அலகு எடை, நீட்சி சதவீதம் மற்றும் 0.2 % திட்ட தகைவு | 600 | ஒரு மாதிரிக்கு | 2 நாட்கள் |
| 3. | பெரும் ஜல்லிக்கான பரிசோதனைகள் | | | |
| அ) | சல்லடை பகுப்பாய்வு | 1,200 | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |
| ஆ) | ஒப்படர்த்தி | 500 | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |
| இ) | சிராய்த்தல் சோதனை | 1,000 | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |
| ஈ) | நொறுக்குதல் சோதனை | 1,000 | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |
| உ) | கனத்தாக்கு சோதனை | 1,000 | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |
| ஊ) | கரிம மாசுகள் கண்டறிதல் | 500 | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |
| 4. | மணலுக்குரிய பரிசோதனைகள் | | | |
| அ) | சல்லடை பகுப்பாய்வு | 1,200 | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |
| ஆ) | ஒப்படர்த்தி | 500 | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |

| வ. எண் | பரிசோதனையின் விவரம் | பரிசோதனை கட்டணம் (ரூபாய்) | அலகு | காலஅளவு |
|---|---|---|---|---|
| இ) | வண்டல் மற்றும் களிமண் அளவீடுகள் | 500 | ஒரு சோதனைக்கு | 3 நாட்கள் |
| ஈ) | கரிம மாசுகள் கண்டறிதல் | 500 | ஒரு சோதனைக்கு | 3 நாட்கள் |
| 5. | சிமெண்டுக்குரிய பரிசோதனைகளான ஒவ்வுமை சோதனை, தொடக்க மற்றும் இறுதி நிலை இறுகல் கால அளவு சோதனை, அழுத்த வலிமை சோதனை மற்றும் உடைபடா நிலை சோதனை | 3,000 | ஒரு மாதிரிக்கு | 30 நாட்கள் |
| 6. | செங்கற்களுக்குரிய பரிசோதனைகளான தூள் பூத்தல் சோதனை, நீர் உறிஞ்சும் தன்மை மற்றும் அழுத்த வலிமை சோதனை | 2,000 | ஒரு மாதிரிக்கு | 10 நாட்கள் |
| 7. | சுட்ட களிமண் செங்கற்களுக்கான சோதனைகளான நீர் உறிஞ்சும் தன்மை மற்றும் வளைவு வலிமை சோதனை | 2,500 | ஒரு மாதிரிக்கு | 10 நாட்கள் |
| 8. | கற்காரை கலவை வடிவமைத்தல் | 20,000 | ஒரு சோதனைக் கு | 40 நாட்கள் |
| 9. | தள மற்றும் தட்டு ஓடுகளுக்கான பரிசோதனையான வளைவு வலிமை சோதனை | 2,500 | ஒரு மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 10. | சுண்ணாம்பின் இயற்பண்புகள் சோதனைகள் | 3,000 | ஒரு மாதிரிக்கு | 30 நாட்கள் |
| 11. | எரிசாம்பலில் சுண்ணாம்பின் வினைதிறன் சோதனை | 2,000 | ஒரு மாதிரிக்கு | 30 நாட்கள் |

## இணைப்பு – III

### மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் மேற்கொள்ளும் பரிசோதனைகள் குறித்த விவரங்கள்

| வ. எண் | ஆய்வுகளின் விவரம் | ஆய்வு கட்டணம் ரூ. | அளவு | காலம் |
|---|---|---|---|---|
| **களஆய்வுகள்** | | | | |
| 1 | விவசாயிகளுக்காக துளைக்கிணறு அமைக்க இடத்தேர்வு செய்ய புவிபௌதீக ஆய்வு | 500 | ஒரு இடம் தேர்வு | 1 வாரம் |
| 2 | விவசாயிகளுக்காக திறந்த வெளி கிணறு அமைக்க புவிபௌதீக ஆய்வு | 500 | ஒரு இடம் தேர்வு | 1 வாரம் |
| 3 | பொதுமக்கள் / அரசு கட்டிடங்களில் துளைக்கிணறு அமைக்க புவிபௌதீக ஆய்வு | 1000 | ஒரு இடம் தேர்வு | 1 வாரம் |
| 4 | பொதுமக்கள் / அரசு கட்டிடங்களில் திறந்த வெளி கிணறு அமைக்க புவிபௌதீக ஆய்வு | 1000 | ஒரு இடம் தேர்வு | 1 வாரம் |
| **ஆய்வக பரிசோதனை** | | | | |
| 5 | விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு வழக்கமாக ஆய்வு மேற்கொள்ளும் காரணிகள் நேர் அயனிகள் (Cation) , எதிர் அயனிகள் (Anion), மொத்த கரைந்துள்ள உப்புகள் (TDS), மொத்த கடினத்தன்மை(TH), அமிலகாரத்தன்மை (PH) | 250 | ஒரு நீர் மாதிரிக்கு | 1 வாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| **தகவல்கள் அளித்தல்** | | | | |
| 6 | மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் | 100 | ஒரு வகை விவரம்/ ஒரு வருடத்திற்கு / ஒரு மாவட்டம் | 1 வாரம் |
| 7 | அரசு சாரா நிறுவனங்கள் | 200 | ஒரு வகை விவரம்/ ஒரு வருடத்திற்கு / ஒரு மாவட்டம் | 1 வாரம் |
| 8 | திட்ட ஆலோசகர் | 300 | ஒரு வகை விவரம்/ ஒரு வருடத்திற்கு / ஒரு மாவட்டம் | 1 வாரம் |
| 9 | பொது மக்கள் / தனியார் நிறுவனங்கள் | 500 | ஒரு வகை விவரம்/ ஒரு வருடத்திற்கு / ஒரு மாவட்டம் | 1 வாரம் |
| 10 | தொடர்புடைய துறைகள் | கட்டணமில்லை | | |
| **நிலநீர் தடையில்லாச் சான்று** | | | | |
| 11 | மித அபாயகரமான மற்றும் பாதுகாப்பான குறுவட்டங்களில் தொழிற்சாலைகளுக்கு வர்த்தக ரீதியாக நிலத்தடி நீரை எடுத்து பயன்படுத்த தடையில்லா சான்று (NOC) வழங்குதல். | 6000 | ஒரு துளைக் கிணறு / திறந்த வெளி கிணறு | 40 நாட்கள் |

# இணைப்பு – IV

## பொதுத்தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி

| வ. எ ண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 1 | முதன்மைத் தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை (ம)<br>தலைமைப் பொறியாளர் (பொது),<br>பொதுப்பணித்துறை அலுவலகம்,<br>சேப்பாக்கம், சென்னை – 5. | 1.செயற்பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை<br>(தொழில்நுட்பம்)<br>தொலைபேசி எண் : 044 – 28525351<br>Extn. 209<br>மின்னஞ்சல் : rtieicwrd2017@gmail.com<br><br>2.முதன்மைப் பணியாளர் அலுவலர்,<br>நீர்வள ஆதாரத்துறை (பொது),<br>தொலைபேசி எண் : 044 – 28525351<br>மின்னஞ்சல் : rtieicwrd2017@gmail.com | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>(பாசனம்), நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 28594144<br>மின்னஞ்சல் : eicwrdtn@gmail.com |
| 2 | சுரங்கம் மற்றும் கண்காணிப்பு வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>சேப்பாக்கம், சென்னை – 5. | உதவிப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 –2841 4487<br>மின்னஞ்சல் :<br>semmcirclechennai@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 2841 4487<br>மின்னஞ்சல் :<br>semmcirclechennai@gmail.com |

| | **சென்னை மண்டலம்** | | |
|---|---|---|---|
| 3 | தலைமைப் பொறியாளர் அலுவலகம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>சென்னை மண்டலம்,<br>சென்னை – 5 | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 28410402<br>மின்னஞ்சல் : cecrwropwd@gmail.com | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண்: 044 – 28414150, 28523007<br>மின்னஞ்சல் : cecrwropwd@gmail.com |
| 4 | பெண்ணையாறு வடிநில வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>திருவண்ணாமலை – 606 603. | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண்: 04175 – 236921<br>மின்னஞ்சல் : sepbc52@yahoo.co.in<br>sepbctvmalai2007@rediffmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண்: 04175 – 236921<br>மின்னஞ்சல் : sepbc52@yahoo.co.in<br>sepbctvmalai2007@rediffmail.com |
| 5 | திட்டங்கள் வட்டம் ,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>வேலூர் – 632 006. | சிறப்பு நிலை வரைதொழில் அலுவலர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0416 - 2248780<br>மின்னஞ்சல்.<br>seprojectcirclevellore@yahoo.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0416 - 2248780<br>மின்னஞ்சல்.<br>seprojectcirclevellore@yahoo.com |
| 6 | வெள்ளாறு வடிநில வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>கடலூர் – 1. | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 04142 – 230323<br>மின்னஞ்சல் : sepwdcud@yahoo.co.in | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 04142 – 230323<br>மின்னஞ்சல் : sepwdcud@yahoo.co.in |

| | | | |
|---|---|---|---|
| 7 | பாலாறு வடிநில வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>சேப்பாக்கம், சென்னை – 600 005. | துணை கண்காணிப்புப் பொறியாளர்<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 28591231<br>மின்னஞ்சல் : sepbcwrd@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 28591231<br>மின்னஞ்சல் : sepbcwrd@gmail.com |
| | **திருச்சி மண்டலம்** | | |
| 8 | தலைமைப் பொறியாளர்அலுவலகம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>திருச்சி மண்டலம்,<br>திருச்சி–20. | தலைமை வரைதொழில் அலுவலர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0431–2331411<br>மின்னஞ்சல் : cetrydb@gmail.com<br>cetrydb@hotmail.com | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0431–2331411<br>மின்னஞ்சல் : cetrydb@gmail.com<br>cetrydb@hotmail.com |
| 9 | மேல்காவேரி வடிநில வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>சேலம். | துணை கண்காணிப்புப் பொறியாளார்<br>தொலைபேசி எண். 0427–2413474<br>மின்னஞ்சல் : uppercauvery@gmail.com | கண்காணிப்புப்பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0427–2413474<br>மின்னஞ்சல் :uppercauvery@gmail.com |
| 10 | நடுக்காவேரி வடிநில வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>திருச்சி–20 | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0431–2331860,<br>மின்னஞ்சல் : semcbctry@yahoo.co.in | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0431–2331860,<br>மின்னஞ்சல் : semcbctry@yahoo.co.in |
| 11 | கீழ்காவேரி வடிநில வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தஞ்சாவூர். | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 04362–230133<br>மின்னஞ்சல் : selcbtnj@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 04362–230133<br>மின்னஞ்சல் : selcbtnj@gmail.com |

| | | | |
|---|---|---|---|
| | **மதுரை மண்டலம்** | | |
| 12 | தலைமைப் பொறியாளர் அலுவலகம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>மதுரை மண்டலம்,<br>மதுரை – 625 002 | தலைமை வரை தொழில் அலுவலர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0452 – 2530 326<br>நிகரி : 0452 – 2530826<br>மின்னஞ்சல் : cepimmdu@gmail.com | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0452 – 2530 326<br>நிகரி : 0452 – 2530826<br>மின்னஞ்சல் : cepimmdu@gmail.com |
| 13 | பெரியாறு வைகை வடிநில வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>46, வடக்கு சித்திரை வீதி,<br>மதுரை– 625 001 | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0452– 2623828<br>மின்னஞ்சல் : sepvbcmdu@yahoo.co.in | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0452– 2623828<br>மின்னஞ்சல் :<br>sepvbcmdu@yahoo.co.in |
| 14 | கீழ்வைகை வடிநில வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>சிவகங்கை – 630 562. | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 04575 – 240304<br>மின்னஞ்சல் : selvbsva@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 04575 – 240304<br>மின்னஞ்சல் : selvbsva@gmail.com |
| 15 | வைப்பாறு வடிநில வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>விருதுநகர்–626 001. | கூடுதல் நேர்முக உதவியாளர்<br>(தொழில்நுட்பம்), நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 04562-247132<br>மின்னஞ்சல் : sevbcvnr@gmail.com<br>sevbcvnr1@gmail.com | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 04562–247132<br>மின்னஞ்சல் : sevbcvnr@gmail.com<br>sevbcvnr1@gmail.com |
| 16 | தாமிரபரணி வடிநில வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>திருநெல்வேலி – 627 002. | துணை கண்காணிப்புப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0462 – 2574232 , 2574832<br>மின்னஞ்சல் : setbctvl@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0462 – 2574232, 2574832<br>மின்னஞ்சல் : setbctvl@gmail.com |

| | | | |
|---|---|---|---|
| 17 | திட்டங்கள் வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>திருநெல்வேலி – 627 002. | துணை கண்காணிப்புப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0462 – 2573303<br>மின்னஞ்சல் : sepctin@yahoo.co.in | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0462 – 2573303<br>மின்னஞ்சல் : sepctin@yahoo.co.in |
| | **கோயம்புத்தூர் மண்டலம்** | | |
| 18 | தலைமைப் பொறியாளர் அலுவலகம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>கோயம்புத்தூர் மண்டலம்,<br>கோயம்புத்தூர் – 641 001. | துணை தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0422 – 2381802, 2381803<br>மின்னஞ்சல் : chiefwropwd@gmail.com | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0422 – 2381802, 2381803<br>மின்னஞ்சல் : chiefwropwd@gmail.com |
| 19 | பரம்பிக்குளம் ஆழியாறு வடிநில வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>பொள்ளாச்சி–642 003. | துணை கண்காணிப்புப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 04259 – 237916<br>மின்னஞ்சல் : sewropoy@gmail.com | கண்காணிப்புப்பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 04259 – 237916<br>மின்னஞ்சல் : sewropoy@gmail.com |
| 20 | சிறப்பு திட்ட வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>பழனி– 624 601. | துணை கண்காணிப்புப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 04545 – 250148<br>மின்னஞ்சல் : sewropalani@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 04545 – 250148<br>மின்னஞ்சல் : sewropalani@gmail.com |
| 21 | பவானி வடிநில வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>ஈரோடு – 638 002 | துணை கண்காணிப்புப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0424 – 2255244<br>மின்னஞ்சல் : sewroerode@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0424 – 2255244<br>மின்னஞ்சல் : sewroerode@gmail.com |

| | | | |
|---|---|---|---|
| | **திட்ட உருவாக்கம்** | | |
| 22 | தலைமைப் பொறியாளர் அலுவலகம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>திட்ட உருவாக்கம்,<br>சென்னை–600 005. | துணை தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 2852 5662<br>மின்னஞ்சல் :<br>ceplanformulation@gmail.com<br>cepf2007@yahoo.co.in | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 2852 5662<br>மின்னஞ்சல் :<br>ceplanformulation@gmail.com<br>cepf2007@yahoo.co.in |
| 23 | திட்ட உருவாக்க வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>குமாரசாமிபட்டி<br>சேலம் – 636 007. | ஆட்சி அலுவலர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0427–2417452<br>மின்னஞ்சல் : sepfsalem@rediffmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0427–2417452<br>மின்னஞ்சல்:sepfsalem@rediffmail.com |
| 24 | திட்ட உருவாக்க வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>திருச்சி. | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0431 – 2333415<br>மின்னஞ்சல் : sepftry2002@yahoo.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0431 – 2333415<br>மின்னஞ்சல் : sepftry2002@yahoo.com |
| 25 | சுற்றுச் சூழல் குழும வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>திருச்சி –620 020. | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0431 – 2316219<br>மின்னஞ்சல் : seenvctry@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0431 – 2316219<br>மின்னஞ்சல் : seenvctry@gmail.com |

| | | | |
|---|---|---|---|
| | **வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்** | | |
| 26 | தலைமைப் பொறியாளர் அலுவலகம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்,<br>சேப்பாக்கம், சென்னை – 600 005. | தலைமை வரைதொழில் அலுவலர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044–28410403<br>மின்னஞ்சல் : cedrcs@rediffmail.com | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044–28410403<br>மின்னஞ்சல் : cedrcs@rediffmail.com |
| 27 | வடிவமைப்பு வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>சேப்பாக்கம், சென்னை–600 005. | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 2841 4074<br>மின்னஞ்சல் :<br>sedesignstnpwdwro@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 2841 4074<br>மின்னஞ்சல் :<br>sedesignstnpwdwro@gmail.com |
| 28 | நீரியல் மற்றும் நீர் நிலையியல் ஆய்வுக்கழகம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>பூண்டி – 602 023. | உதவி இயக்குநர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044–27639924<br>மின்னஞ்சல் : ddihhpoondi@yahoo.co.in | கண்காணிப்புப் பொறியாளர் / இயக்குநர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044–27639924<br>மின்னஞ்சல் :ddihhpoondi@yahoo.co.in |
| | **இயக்கம் (ம) பராமரிப்பு** | | |
| 29 | தலைமைப் பொறியாளர் அலுவலகம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>இயக்கம் (ம) பராமரிப்பு,<br>சேப்பாக்கம், சென்னை–600 005. | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 28415557<br>மின்னஞ்சல் : ceomwro@gmail.com | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 28415552<br>மின்னஞ்சல் : ceomwro@gmail.com |
| 30 | அணைகள் பாதுகாப்பு இயக்ககம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>சேப்பாக்கம், சென்னை–600 005. | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் இயக்குநர் அலுவலகம், நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 28548269<br>மின்னஞ்சல் :tndamsafety@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் இயக்குநர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 28548269<br>மின்னஞ்சல் :tndamsafety@gmail.com |

| | | | |
|---|---|---|---|
| 31 | பணிமனை மற்றும் பண்டக சாலை வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>சேப்பாக்கம், சென்னை–600 005. | உதவி செயற்பொறியாளர்,<br>கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,<br>பணிமனை மற்றும் பண்டக சாலை வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044–28548690<br>மின்னஞ்சல் :<br>seworkshoppwd@yahoo.com | கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,<br>பணிமனை மற்றும் பண்டக சாலை வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044–28548690<br>மின்னஞ்சல் :<br>seworkshoppwd@yahoo.com |
| 32 | மாநில திட்ட மேலாண்மை அலகு,<br>அணை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் திட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>பாலாறு இல்லம்,<br>சென்னை–600 005. | செயற்பொறியாளர் (கொள்முதல்),<br>கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் திட்ட இயக்குநர் அலுவலகம்,<br>மாநில திட்ட மேலாண்மை அலகு,<br>அணை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் திட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 28443034<br>மின்னஞ்சல் : tnspmu@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் திட்ட இயக்குநர், நீ.ஆ.து.,<br>தொலைபேசி எண் : 044 – 28443034<br>மின்னஞ்சல் : tnspmu@gmail.com |
| | **மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்** | | |
| 33 | தலைமைப் பொறியாளர் அலுவலகம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்,<br>தரமணி, சென்னை–600 113. | தொழில் நுட்ப வல்லுநர், (நீர் புவியியலாளர்)<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 2254 1526<br>மின்னஞ்சல் : cegwchennai@gmail.com | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 044 – 2254 1526<br>மின்னஞ்சல் :<br>cegwchennai@gmail.com |
| 34 | நிலநீர் வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தரமணி<br>சென்னை–600 113 | துணை இயக்குநர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>சென்னை.<br>தொலைபேசி எண் : 044–22541591<br>மின்னஞ்சல் : gwcchn@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>சென்னை தொலைபேசி எண் :<br>044–22541591<br>மின்னஞ்சல் : gwcchn@gmail.com |

| | | | |
|---|---|---|---|
| 35 | நிலநீர் வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தஞ்சாவூர் – 613 007 | துணை இயக்குநர்<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 04362 – 271276<br>மின்னஞ்சல் : gwcthanjai@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 04362 – 271276<br>மின்னஞ்சல் :<br>gwcthanjai@gmail.com |
| 36 | நிலநீர் வட்டம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>மதுரை – 625 002. | உதவி செயற் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0452 2531208<br>மின்னஞ்சல் : gwcmdu@gmail.com | கண்காணிப்புப்பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண் : 0452 2531208<br>மின்னஞ்சல் : gwcmdu@gmail.com |
| | **நீர் ஆய்வு, நீரியியல் மற்றும் தரக்கட்டுப்பாடு நிறுவனம்** | | |
| 37 | தலைமைப் பொறியாளர் (ம)<br>இயக்குனர் அலுவலகம்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>நீர் ஆய்வு, நீரியியல் மற்றும்<br>தரக்கட்டுப்பாடு நிறுவனம்,<br>தரமணி, சென்னை – 600 113. | செயற் பொறியாளர்,<br>நீர்வள ஆதாரத்துறை (கோட்டம் –II)<br>தொலைபேசி எண். 044–22542380<br>நீட்சி : 108<br>மின்னஞ்சல்: ceiwswrd@gmail.com | தலைமைப் பொறியாளர் (ம)<br>இயக்குநர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>தொலைபேசி எண். 044–22542380<br>மின்னஞ்சல்: ceiwswrd@gmail.com |
| | **பாசன மேலாண்மை பயிற்சி நிலையம்** | | |
| 38 | தலைமைப் பொறியாளர்,<br>பொதுப்பணித்துறை மற்றும் பொது<br>இயக்குநர் அலுவலகம், பாசன<br>மேலாண்மைப் பயிற்சி நிலையம்,<br>துவாக்குடி, திருச்சிராப்பள்ளி–620 015. | ஆட்சி அலுவலர்,<br>நீர்வள ஆதாரத்துறை,<br>பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்,<br>தொலைபேசி எண் : 0431–2501295<br>மின்னஞ்சல் : tnimtitrichy@gmail.com | இணை இயக்குநர், (பயிற்சி)<br>நீர்வள ஆதாரத்துறை,<br>பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்,<br>தொலைபேசி எண் : 0431–2501019<br>மின்னஞ்சல் : tnimtitrichy@gmail.com |

| | | | |
|---|---|---|---|
| | **மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை** | | |
| 39 | தலைமைப் பொறியாளர் (ம) இயக்குநர்,<br>மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை (SWaRMA),<br>தரமணி, சென்னை – 600 113. | செயற் பொறியாளர்,<br>மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை (SWaRMA)<br>தொலைபேசி எண்:044–22540135.<br>மின்னஞ்சல்:swarmatn@gmail.com | தலைமைப் பொறியாளர் (ம) இயக்குநர்,<br>மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை (SWaRMA),<br>தொலைபேசி எண்:044 – 2254 0135<br>மின்னஞ்சல்: swarmatn@gmail.com |